

ALCYONE.

ஆல்கியோனி

# AT THE FEET OF THE MASTER

BY

**Alcyone**

(J. KRISHNAMURTI.)

*TRANSLATED*

BY

T. S. L.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
28 JUN 1911
MADRAS

Kalyanasundaram Power Press, Tanjore.

125
181.48

R21
N11

119464

# அறிவிப்பு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JU 1911
MADRAS

மனிதர்கள், பொதுவாய் இரண்டு வகுப்பினர்களாக, அமைவுபெற்று நிற்கிறார்கள். ஸ்வயம் ஜோதிரூபமாய், அழிவற்று நிற்கும் ஆன்ம சுவரூபத்தை மறந்து, அந்தகாரமாய், சதா மாறிக் கொண்டு நிற்கும் சரீரத்தையே நானெனக் கருதி, அதற்குரிய வியவகாரங்களிலேயே ஆயுளைக் கழித்துவரும் மனிதர்கள் ஒரு வகுப்பினர். பெரும்பான்மையோர் இவ்வகுப்பினர்களேயாம். என்றாலும், சிறுபான்மையோர், இவ்விதமிராது, ஆன்ம விசாரிகளாய், ஆன்ம சுவரூபத்தை மருவ

வேண்டி நிற்கின்றார்கள். இவர்கள் தழு வும் மார்க்கம் மேன்மார்க்கம்—நிவர்த்தி மார்க்கம், ஏனையோரது மார்க்கம் கீழ் மார்க்கம்—பிரவர்த்தி மார்க்கம்.

நிவர்த்தி மார்க்க சஹாயிகளாய், அம் மார்க்கத்தின் முடிவை யடைந்த மஹான் களிற் சிலர், அம்மார்க்கத்தில் பிரவே சித்து, படியேறிவரு மவர்களுக்கு, பல வாறாக உதவி புரிந்து வருகின்றனர். இம்மஹாத்மாக்களில் ஒருவரது அனுக் கிரஹம் பெற்று, தத்துவோபதேச தீக்ஷை யடைந்து, சித்திபெற்ற ஒருவராகிய ஆல் ஸியோனியென்ற சங்கேத நாமதேயத்தைத் தரித்த ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி

தனக்குக் கிடைத்த உபதேசங்களை இச் சிறு புஸ்தக மூலமாய் வெளியிட்டிருக்கின்றனர்.

இவரது சென்ற முப்பது ஜன்மங்களின் சரித்திரம், சென்ற ஏப்ரல் மாதம் முதல், தியாஸபிஸ்ட் என்ற பத்திரிகையில் வெளிப்பட்டு வந்திருக்கின்றது.

நிகழ்கின்ற காலம் தத்துவ விசாரிகளுக்குரிய காலம். மிக்கவாரும் மனிதர்கள் மனோமயகோச விருத்திகளில் நின்றுகொண்டிருந்தாலும், சிறு பான்மையோர் விவேக விருத்தியைக் கொடுக்கும் விக்கியான மயகோசவிஸர்க்கத்தை அபேக்ஷிக்

கின்றார்கள். அங்ஙன முள்ளவர்களைத் திரைந்தெடுத்து, மகான்கள் உதவி புரிகிறார்கள்; அவர்கள் கிருதயுகதர்மப் பிரவர்த்தர்களாயிருக்கிறார்கள். ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்திக்கு லபித்ததுபோல், ஏன் மற்றவர்களுக்கும் லபித்தல் கூடாது? இச்சிறு புத்தகத்தையே வழியாய்க் கொண்டால் போதுமானது. விவேக போதனைகளை சரிவரக் கிரகித்து, அவைகளின் வழியே நடக்குதல் வேண்டும்.

மொழிபெயர்த்தோன்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
28 JUN 1911
MADRAS.

# ஸத்குருபாதங்களில்

(வரியிலை)

# தட்டுவோர்க்கு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JUN 1911
MADRAS.

𑌅𑌸𑌤𑍋𑌮𑌾𑌸𑌦𑍍𑌗𑌮𑌯.

𑌤𑌮𑌸𑍋𑌮𑌾𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌗𑌮𑌯.

𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌮𑌾𑌽𑌮𑍃𑌤𑌂𑌗𑌮𑌯.

அநித்தியத்தினின்று நித்தியத்திற்கு வழிகாட்டும்

அந்தகாரத்தினின்று பிரகாசத்துக்கு நடத்தும்

மிருதத்தினின்று அமிருதத்துக்கு கொண்டுபோம்.

---

15
OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
26 JUN 1911
MADRAS.

## முகவுரை.

ஒரு இளைய சகோதரரால் முதல் முதல் எழுதிய இச்சிறிய புத்தகத்திற்கு, முகவுரையெழுத, வயதில் முதிர்ந்தவளாகையால், விசேஷ உரிமை எனக்கு லபித்திருக்கின்றது. உண்மையில் சரீரத்தில் அவர் இளையவரே; ஆன்மாவிலல்ல, இதிலடங்கிய போதனைகள், அவருக்கு அவர் குருநாதனால் தத்துவோபதேச

தீக்ஷைக்கு அவரைப் பக்குவப்படுத்தும் ஸமயம், கொடுக்கப்பட்டன. சென்ற வருஷம் அவருக்கு இங்கிலீஷ் ஞானம் இப்பொழுதை விட மிக்கக் குறைந் திருந்தமையால், இவ்வுபதேசங்கள், மெது வாய், பிரயாசத்துடன், ஞாபகப்படுத்திக் கொண்டு, அவராலெழுதப்பட்டன. இதன் மிக்க பாகமும் குருநாதனது சொந்த வாச கத்தின் பிரதிரூபமேயாம். பிரதிரூபமா யில்லாதது, குருநாதனுடைய கருத்து, அவரது சிஷரின் வாசகம். விட்டுப்போன இரண்டு வாக்கியங்கள் குருநாதனா லமைக்கப்பட்டன. இரண்டு இடங்களில் விட்டுப்போன ஒரு வார்த்தை சேர்க்கப் பட்டது. இதொழிய, மற்றெல்லாம்

ஜூல்கியானியின் சொந்தம். உலகத்துக்கு இது அவரது முதல் கொடைப்பொருள்.

நேரில் கேட்ட உபதேசம் அவருக்கு உதவியதுபோல், இதுவும் உலகத்தவர்களுக்கு உதவட்டும் என்ற நம்பிக்கை கொண்டு, அவர் இதை வெளியிடுகின்றார். இவ்வுபதேசம், போதித்திருக்கின்ற பிரகாரம் நடந்தால்தான், பிரயோஜனகரம். குருநாதன் வாக்கிலிருந்து அது வெளிப்பட்டது முதல், அவர் அது பிரகாரமே நடந்து வருகின்றார். இப்போதனையைச் சரியாய்க் கிரகித்து, அவரைப்போலவே அனுஷ்டிக்கக் கூடுமாகில், இதை வாசிப்போருக்கும்; இதை யெழுதியவருக்கு

லபித்ததுபோல், அப்பெரிய மார்க்கவாயில்
சுழன்று திறக்கும்; அப்பொழுது, அதில்
அவரும் அடிவைக்கலாம்.

அன்னிபெஸண்டு.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. 20 NOV 1911

## பீடிகை.

இது எனது வாக்கல்ல, எனக்குப
தேசித்த ஸத்குருவினது வாக்கியம். அவ
ரன்றி எனக்கு ஒன்றும் முடிந்திராது;
அவரது உதவியால் நான் மேன்மார்க்கத்
தில் பிரவேசித்திருக்கின்றேன். நீங்களும்
அம்மார்க்கத்தில் ஏற விரும்புகின்றீர்கள்;
அவரெனக் களித்த போதனைகளை யநுச
ரித்து நீங்களும் நடப்பீர்களாகில், அவை
கள் உங்களுக்கும் உதவிசெய்யும். உண்
மைதான் அவைகள், அழகாயிருக்கின்
றன, என்று சொன்னால் போதாது;
பலனைப் பெற இச்சிக்குமவன், போதித்

திருக்கின்ற பிரகாரம் சரியாய் நடக்க வேண்டும். பசியோடிருப்பவன், உணவைப் பார்த்து, அது நன்றாயிருக்கிறதென்றால் போதாது; கைநீட்டி எடுத்துச் சாப்பிட வேண்டும். அப்படியே குருநாதன்து உபதேசங்களை, கேட்டால் போதாது; அவர் சொல்லும் ஒவ்வொரு குறிப்பையும் கிரகித்து, நீங்கள் நடக்கவேண்டும். ஒரு குறிப்பு கிரகிக்கப்படாவிட்டாலும், ஒரு வார்த்தை விடுபட்டுப்போனாலும், அது போனதேயாம்; ஏனெனில், அவர் ஒன்றை இரண்டுதரம் சொல்லுகின்றாரில்லை.

இம் மேன்மார்க்கத்துக்குரிய சாதனங்கள் நான்கு :—

பகுத்தறிவு.—விவேகம்.

ஆசையின்மை.—வைராக்கியம்.

நல்லொழுக்கம்.—இந்திரியநிக்கிரஹம்.

அன்பு.—பிரேமை.

இவைகள் ஒவ்வொன்றைப்பற்றியும், குருநாதன் எனக்குச் சொல்லியதை, உங்களுக்கு நான் சொல்ல முயல்கின்றேன்.

# ஸத்குரு பாதங்களில்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUN 1911
MADRAS.

## I

இச்சாதனங்களில் முதலாவதாயுள்ளது பகுத்தறிவு. இது, மனிதர்களை மேன்மார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்கின்ற நித்தியா நித்திய வஸ்து விவேகமென்று, சாதாரணமாய்ச் சொல்லப்படுகின்றது. இது சரிதான்; என்றாலும், இது போதாது; அநுஷ்டானத்துக்கு வரவேண்டும். மார்க்கப்பிரவேசம் முதல், அதன் முடிவு வரையில், ஒவ்வொரு நாளும், அதன் ஒவ்வொரு படியிலும், அது அநு

பலத்தி லிருக்கவேண்டும். அம்மார்க்கத்தில் மாத்திரம்தான், பெற யோக்கியதையுள்ள விஷயங்கள் அடையக்கூடியவைகளாயிருக்கின்றனவென்று, நீ அறிந்திருக்கின்றமையால், நீ அம்மார்க்கத்தில் பிரவேசிக்கின்றாய். அறிவில்லாதவர்கள், ஐசுவரியத்தையும் அதிகாரத்தையும், அடையமுயலுகிறார்கள்; இவைகள் எவ்வளவு நீடித்திருந்தாலும், ஒரு ஜென்மத்திற்கு மேற்பட்டு இருக்கக் கூடியவைகளல்லவாகையால், இவைகள் அநித்தியம். இவைகளை விட விசேஷித்தவைகள் வேறு இருக்கின்றன; அவைகள் சாச்வதமாயும் ஸ்த்தாயுமுள்ளவைகள்; அவைகளை நீ ஒருமுறை பார்த்துவிட்டால், இவை

களை நீ ஒருபொழுதும் இச்சிக்கமாட்டாய்.

இவ்வுலகிலுள்ள ஜனங்கள் யாவரும், அறிவினர், அறிவிலர், என இருவகையினர்; இதை அறிந்துகொள்வது மிகவும் முக்கியம். ஒரு மனிதனது ஜாதியும் மதமும் முக்கியமல்ல; உண்மையில் முக்கியமானது ஈசுவரன் மனிதர்களுக்கு வகுத்திருக்கும் சட்டத்தின் அறிவு. அச்சட்டத்திற்கு ஜீவபூத விஸர்க்கம் என்று பெயர். ஒருமுறை ஒரு மனிதன் அதைப் பார்த்து, உண்மையில் அதைத் தெரிந்து கொண்டால், அது, மிகவும் சிறப்புற்று மகிமைதங்கி நிற்பதால், அவன் அதற்

கிணங்க நடவாமலும், அதனுடன் ஒரு மைப்படாமலும் இருக்க முடியாது. ஆகையால், அவன் அறிவுபெற்று ஈசுவரன் வழியே நின்று, நன்மை புரிந்து, தீமை விலக்கி, ஜீவபூத விஸர்க்கத்திற்கிணங்க நடந்து, ஸ்வலாப நோக்கத்தை விட்டு விடுகிறான்.

அவன் ஈசுவரன் வழியே நிற்பானகில், அவன் எங்களில் ஒருவனுகிறான்; அவன் ஹிந்துவானாலும் சரி, பௌத்தனானாலும் சரி, கிறுஸ்தவனானாலும் சரி, மஹம்மதியனானாலும் சரி, இந்தியன், இங்கிலீஷ்காரன், சீனன், ருஷியன், இவர்களில் யாரானாலும் சரி, சிறிதும் பாதகமில்லை. ஈசு

வரன் வழியே நிற்பவர்கள், இங்கு அவர்கள் வந்ததின் காரணத்தையும், அவர் செய்யவேண்டியது இன்னது என்பதையும் தெரிந்தவர்களாகையால், அதன் பிரகாரம் நடக்க முயலுகிறார்கள். மற்றவர்களோவெனில், தாங்கள் எவ்விதம் நடக்கவேண்டுமென்பதை யறியாது, அடிக்கடி அறிவீனமாய்ப் பிரவர்த்தித்து, ஸர்வமும் ஒன்றாகையால் ஒருவனாகிய ஈசுவரனது ஸங்கல்பப் பிரகாரம் நடவாவிட்டால் ஒருவரும் உண்மையில் சுகமடையாரென்பதை அறியாதவர்களாய், தங்களுக்கு சுகமென்று தாங்களே நினைக்கின்ற புதிய வழிகளைக் கற்பித்துக்கொள்ள முயலுகிறார்கள். சாச்வதத்தை விட்டு, அசாச்வ

தத்தைப் பின் தொடருகிறவர்களுமாகிறார்கள். இவ்விரு வகைகளைப் பகுத்தறியும் வரையில், அவர்கள் ஈசுவரன் வழியே நிற்காதவர்க ளாகிறார்கள். ஆகையால், மேற்சொல்லிய பகுத்தறிவே முதல்படி.

ஆனால், இவ்விதம் தீர்மானித்துக்கொண்டாலுங்கூட, இந்நித்தியா நித்தியங்களே பற்பல விதங்களென, நீ ஞாபகத்தில் வைக்கவேண்டும். நீதி, அநீதி, முக்கியம், அமுக்கியம், பிரயோஜனகரம், அப்பிரயோஜனகரம், ஸத்தியம், அஸத்தியம், ஸ்வப்பிரயோஜனகரம், பரப்பிரயோஜனகரம், என இவைகளைப் பகுத்தறியவேண்டும்.

இது நீதி, இது அநீதியென் றறிவது பிரயாசமில்லை; ஏனெனில், குருநாதனைப் பின்பற்ற விரும்புமவர்கள், எது எப்படி நேரிட்டாலும், நீதிவழியே செல்ல, முந்தியே தீர்மானித்துவிட்டவர்க ளாகிறார்கள். ஆனால், சரீரம் வேறு, மனிதன் வேறு; மனிதனின் இச்சையையே எப்பொழுதுமே சரீரம் விரும்புகிறதாயில்லை. உன் சரீரம் ஒன்றை விரும்புகையில், உனக்கு அது யதார்த்தமாய்த் தேவையாவென்று, நின்று, நிதானி. ஏனெனில், நீயே ஈசுவரன்; ஈசுவரன் இச்சிப்பதே தான் நீ இச்சிப்பது; என்றாலும், உனக்குள்ளிருக்கும் ஈசுவரனை நீயறிய, உன் உள்ளிலேயே நீ ஆழ்ந்து பார்த்து, அவ

ரது தொனியை ஒற்றுக்கேள்; அது உனது தொனியேதான். உனது சரீரங்களை நீயே யென்று தவறி யெண்ணிவிடாதே; ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள் நீ யல்ல. இவைகளில் ஒவ்வொன்றும், தனக்கு வேண்டுவதைப் பெற, தானே நீ யென நடிக்கும். ஆனால், நீ, அவைகளல்லவென்று அறியவேண்டும்; நீ அவைகளின் எஜமானன்.

செய்யவேண்டிய வேலை யிருக்கும் பொழுது, ஸ்தூல சரீரமானது, இளைப்பாறவாவது, உலாத்த வெளியே போகவாவது, அன்ன பானாதிகளை உட்கொள்ளவாவது, விரும்பும்; "இவைகளவசிய

மாலையால் நான் செய்ய வேண்டும்", என்று விவேகமற்றவன் ஆலோசிக்கிறான். விவேகியோ வெனில், "இவ்விருப்பம் கொண்டுள்ளது நான் அல்ல, ஆகையால் கொஞ்சம் காத்திருக்கட்டும்," என்று நிதானிக்கிறான். பிறருக்குதவி செய்யச் சமயம் நேரிட்டால், "இது என்ன உபத்திரவம், வேறு யாராவது செய்யட்டுமே," என்று சரீரம் பலகாலும் நினைக்கின்றது. "நற்பணி செய்ய நீ தடை புரியாதே," என்று விவேகி தீர்மானிக்கின்றான்.

சரீரம் ஒரு மிருகம் போன்றது. நீ சவாரி செய்யும் குதிரை. ஆதலின், அதை நன்குறக் கவனித்து நடத்தி மிது

மிஞ்சிய வேலைக்குட்படுத்தாது, சுசியான அன்னபானுதிகளால் சரிவரப் போஷித்து, துளிகூட அழுக்கற்ற ஸ்திதியில் ஸதா அதை நீ வைக்கவேண்டும். ஏனெனில், முற்றிலும் சுசியாயும், ஆரோக்கியமாயும் சரீரமிருந்தால்தான், மேன் மார்க்கத்துக் குரிய கஷ்ட நிஷ்டூரங்களுக்கிணங்க நட ந்து, அதன் அதிப்பிரயாசத்தை அதற் குச் சகிக்கமுடியும். ஆகையால், சரீரம் உனக்கு உள்பட்டிருக்க வேண்டுமே யல் லாது, அதன் வசம் நீ யிருப்பதுகூடாது.

ஸூக்ஷம சரீரம் (அதாவது காம சரீரம்) அனேக ஆசைகளுடன் கூடியது; உன்னை கோபம் கொள்ளும்படியாகவும், கொடிய

வசனங்களைப் பேசும்படியாயும், மாச்சரியம் கொள்ளும்படியாகவும், பணத்தில் பேராசை கொள்ளும்படியாகவும், மற்றவர்களுடைய பொருள்களைக் கண்டு அசூயை அடையும்படியும், நீ மனக்கிலேசத்திற் குள்படும்படியும், அது விரும்பும். இவைகளும், இன்னும் இவை போன்ற அநேகங்களும், அதற்குத் தேவை. இவ்வாறு அது இச்சிப்பது, உனக்குத் தீங்கு செய்ய விரும்பியல்ல; இவ்வித உக்கிர சலனங்களில் அதற்கு இச்சை; இவைகளை ஸதா மாற்றிக்கொண்டிருக்கவும் அதற்கு விருப்பம். ஆனால், உனக்கு இவைகளொன்றும் அவசியமில்லை; ஆகையால், உனது அவசியங்களின்

ணவை, உனது சரீரத்தி னவசியங்க ளின்
னவை யென்று நீ பகுத்தறியவேண்டும்.

உனது மானஸீக சரீரம், கர்வத்து
டன் பிரிந்து நின்று, தன்னை மேலாகவும்,
மற்றவர்களைக் குறைவாகவும் கருத, இச்
சிக்கின்றது. உலக வியாபாரங்களினின்று
அதை நீ திருப்பி நிறுத்துஞ் சமயத்தி
லுங்கூட, தன் ஸ்வப் பிரயோஜனத்
தையே மதித்து, பிறர்க்குதவி செய்யவும்,
ஈசுவர கைங்கரியத்தை நினைக்கவும் ஒட்
டாமல் தடுத்து, உனது மேன்மையையே
கருதும்படி செய்யும். தியானம் செய்ய
நீ உட்கார்ந்தால், உனக் கவசியமாகிய
ஒரே வஸ்துவை நினைக்கவிடாமல், அதற்

கவசியமான அநேக விஷயங்களை யெண்ணும்படி, அது உன்னைச் செய்யும். இம் மனது நீ அல்ல; அது உனக்கு உதவிக்காக ஏற்பட்டுள்ளது. ஆகையால், இதிலுங்கூட, நீ பகுத்தறியவேண்டியது அவசியம். நீ இடைவிடாது இம்மனதைக் கவனித்தல் வேண்டும். அன்றேல், நீ தவறிவிடுவாய்.

குப்தவித்தையில், நீதிக்கும் அநீதிக்கும் மத்தியில், படியேற்படவில்லை. நீதியெதுவோ அது உன்னால் எவ்வகையிலும் செய்யப்படவேண்டும்; அநீதி விட்டொழிக்கப்படவேண்டும்; இவ்விஷயத்தில், அறியாதவர்களுடைய அபிப்பிராயம் கவனிக்கத்தக்க



C

தல்ல. பிரபஞ்சத்தில் குப்தமாய் நிற்கும் ஈசுவர சட்டநியமங்களை, நீ ஆழ்ந்து ஆராய்ந்து தெரிந்துகொள்ளவேண்டும்; இவ்விதம் தெரிந்துகொண்டு, உனது விவேகத்தையும் அனுபவ ஞானத்தையும் உபயோகித்து, உனது வாழ்நாட்களை நீ ஒழுங்காக்கிக்கொள்.

முக்கியமிது, அமுக்கியமிது, என்பதையும் நீ தெரிந்துகொள்ளவேண்டும். அநீதியை ஒழித்து, நீதிதவறாது நடப்பதில், நீ மலைபோல் உறுதியாய் நில்; சில்லறை விஷயங்களில், நீ இதரர்களுக்கிணங்க எப்போதும நட. ஏனெனில், நீ யெப்பொழுதும் சாந்தனும், உபகாரியாயும், விவேகத்

துடன் கூடினவனுயும், பிறருக்கிணங்க நடக்கக்கூடியவனுயும் இருக்கவேண்டும்; நீ, உனக்கிச்சிக்கும் சுதந்தரத்தைப் பிறரும் அடைய, விரும்பு.

செய்யத் தகுதியுள்ளது இது என்பதைத் தெரிந்துகொள்ள முயல்; காரியம் பெரிது சிறிது என்பதல்ல நீ கவனிக்கவேண்டியது. உலகம் நல்லதென்று சொல்லும் ஒரு பெருங் காரியத்தைவிட், குருநாதனது பிரவர்த்திக்கு நேரே அநுகூலமாயிருக்கும் ஒரு சிறிய காரியம் மிகவும் மேன்மை. உபயோகமுள்ளதிது, உபயோகமற்றதிது, என்று நீ தெரிந்துகொண்டால் போதாது; உபயோகமுள்ளவை

களிலேயே தாரதம்மியத்தையும் நீ யறிய வேண்டும். ஏழைகளுக்கு அன்னமிடு வது மேன்மை தங்கிய உபகாரமான நல்ல காரியம்; ஆனால், அவர்களது சரீர ங்களைப் போஷிப்பதை விட, அவர்களு டைய ஜீவன்களை விருத்திக்குக் கொண்டு வருவது மிக்க உபயோகமுள்ள மேலான காரியம். பணமுள்ள எவனும் சரீரத்தி ற்கு உணவளிக்கக்கூடும்; ஆனால், ஞான முள்ளவர்கள்தான் ஜீவனைப் போஷிக்கத் திராணியுள்ளவர்கள். நீ அறிவைப் பெற் றால் மற்றவர்களும் அதைப்பெற, நீ உதவி செய்வது உனது கடமை.

நீ யெவ்வளவு மெய்யறிவுள்ளவனுகி லும், இம்மேன் மார்க்கத்தில் நீயறிய வேண்டியது அதிகமிருக்கின்றது; இங் கும் உனக்கு பகுத்தறிவு வேண்டும்; தெரிந்துகொள்ளத் தகுதியானது இன்ன தென்று நீ ஆழ்ந்து நிதானிக்கவேண்டும். எல்லா அறிவும் பிரயோஜனகரம்தான்; அறிவெல்லாம் உனதாக ஆகிற காலமும் வரும். என்றாலும், அறிவின் ஒரு கூறு மாத்திரம் உன்னுடையதாயிருக்குங்கால், அக்கூறு மிக்க உபயோகமுள்ள கூருக இருக்கச் செய்துகொள். மெய்யறிவே ஈசுவரன், அன்பும் அவரே. நீ அடை யும் மெய்யறிவுக்குத் தக்கவாறு, ஈசுவர ஸாந்நித்தியம் உன் துவாரா வெளிப்படு

கின்றது. ஆகையால், நன்ருய்க் கல்; பிறர்க்குதவி செய்ய உனக்குமிக்க உதவு மவைகளை முதலில் கல்; இக்கல்வியைப் பொறுமையுடன் அடை; இது மனிதர் கள் உன்னை விவேகியென்று நினைப்பதற் காகவல்ல; விவேகியென்று நீயே அறி ந்து ஆனந்தப்படுவதற்காகவு மல்ல; விவே கிதான் ஆராய்ந்து விவேகத்துடன் உதவி புரியக்கூடும். நீ எவ்வளவு உதவி புரிய விரும்பினும், விவேகக்குறைவால், உனது செய்கைகளில் நன்மை குறைந்து, தீமை மேலிடும்.

சத்திய மின்னது, அசத்திய மின்னது என்பதை நீ தெரிந்துகொள்; மனோவாக்

குக் காயங்களில் எப்பொழுதும் நீ சத்தியவானுயிருக்கக் கற்றுக்கொள்.

மனச்சத்தியம் முதலில்; இது இலகுவல்ல; ஏனெனில், அசத்தியச் சித்தவிருத்திகளும், விவேகமற்ற பித்தியா தருமங்களும், உலகத்தில் அனேகம்; இவைகளுக்குட்பட்டிருக்கும் எவனும் அபிவிருத்தியாக முடியாது. ஆகையால், ஒரு எண்ணத்தை அநேகம் பேர்கள் ஒரே விதமாய்க் கொண்டிருந்தாலும் சரி, வெகு காலமாய் அது ஜனங்களால் கம்பப்பட்டிருந்தாலும் சரி,, ஜனங்களால் உத்கிருஷ்டமென்று நினைக்கப்பட்ட புஸ்தகங்களில் அது எழுதப்பட்டிருந்தாலும் சரி, இக்காரண

ங்களால் அதை நீ அங்கீகரிக்கவேண்டி யதில்லை; அதை நீயே ஆலோசித்துப் பார்த்து, நியாயமானதுதானு வென்று நீயே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஒரு விஷயத்தைப்பற்றி, ஒன்றுந் தெரி யாத ஆயிரம் ஜனங்கள் அதைக்குறித்து ஒரே விதமாய் அபிப்பிராயங் கொண்டி ருந்தாலும், அவ்வபிப்பிராயத்தால் ஒரு பிரயோஜனமுமில்லை யென்பதை நீ ஞாப கத்தில் வை. மேன்மார்க்கத்தில் செல்ல இச்சிப்பவன், ஒவ்வொரு காரியத்தையும் தானே ஆலோசித்து நிதானிக்கப் பயில வேண்டும்; ஏனெனில் இவ்வுலகிலுள்ள பெருங் கெடுதிகளிலும், பந்தங்களிலும், மித்தியா தருமம் ஒன்று; அதினின்று

உன்னை நீ முழுதும் விடுவித்துக்கொள்ள வேண்டும்.

மற்றவர்களைக் குறித்து உனக்குள்ள அபிப்பிராயம் உண்மையானதா யிருக்க வேண்டும்; அவர்களைக் குறித்து உனக்குத் தெரியாத விஷயங்களில் நீ அபிப்பிராயங் கொள்ளக்கூடாது. அவர்களெப் பொழுதும் உன்னைக் குறித்து நினைத்துக் கொண்டிருப்பதாக நீ சங்கியாதே. உனக்குத் தீங்கென்று நீ நினைக்கின்றவொன்றை ஒரு மனிதன் உனக்குச் செய்தாலும், உன்னைக் குறித்தது என்று நீ நினைக்கின்றவொன்றை அவன் சொன்னாலும், "அவன் எனக்குக் கெடுதி செய்ய எண்

ணங்கொண்டான்", என்று நீ உடனே நினைக்காதே. அநேகமாய் அவன் உன்னை நினைக்காமலேயிருந்திருக்கலாம்; ஏனெனில், ஒவ்வொரு ஜீவனுக்கும் அதன் சொந்த கஷ்டங்களிருக்கின்றன; அதனெண்ணங்களே முக்கியமாய் அதனைச் சுற்றி நிற்கும். ஒரு மனிதன் உன்னிடத்தில் கோபமாய்ப் பேசினுல், "அவனெனக்கு விரோதி, எனக்குக் கெடுதி செய்ய விரும்புகிறுன்", என்று நீ நினையாதே. அநேகமாய் வேறு யாராவதொருவன், அல்லது, வேறு ஏதாவது ஒரு விஷயம், அவனைக் கோப மூட்டியிருக்கலாம்; நீ அவனுக்கு எதிர்ப்பட்ட காரணத்தினுல், அக்கோபத்தை உன்னிடம் அவன் காட்

டலாம். அவனுடைய செய்கை மூடத் தனம்; கோபம் எப்பொழுதும் மூடத் தனம் தானே; ஆகையினால் அவனைப் பற்றி நீ அசத்தியமாய் நினைக்கவேண் டாம்.

சத்குருவின் சிஷ்யனாய் நீ ஆகும்பொ ழுது, உனது சித்தவிருத்தியை அவரது சித்த விருத்தியோடு சேர வைத்து, உனது சித்த விருத்தியின் உண்மையை அறிய எப்பொழுதும் நீ முயலலாம்; ஏனெனில், சிஷ்யன் குருநாதனோடு ஒரு மைப்பட்டவன்; அவன் தன தெண்ண த்தை குருநாத னெண்ணத்தோடு, சேர் த்து மாத்திரம் பார்க்கவேண்டியது;

அது ஒருமனப்பட்டதா படாததா என்
பது உடனே தெரியும்; ஒருமனப்படா
விடில், அவ்வெண்ணம் தப்பெண்ணம்,
அவன் உடனே அதை மாற்றிக்கொள்கி
றான். ஏனெனில், குருநாதன் ஸர்வக்ஞ
னுகையால், அவரது எண்ணம் குற்றமற்
றது. இன்னும் குருநாதனுக்கு சிஷ்யர்க
ளாகாதவர்கள், இவ்விதமே செய்வது
கூடாவிட்டாலும், அடிக்கடி தாங்கள்
தங்களுடைய எண்ணங்களை நிதானித்துப்
பார்த்து, "குருநாதன் இதைக்குறித்து
என்ன நினைப்பார், இவ்வித சந்தர்ப்பங்
களில் அவர் என்ன சொல்வார், என்ன
செய்வார்" என்ற விதமா யாலோசித்து,
தங்களைத் திருத்திக்கொள்ளலாம். ஏனெ

ன்றல், எதை குருநாதன் செய்யமாட்டார், சொல்லமாட்டார், நினைக்கமாட்டார், என்று நீ நினைக்கிறாயோ, அதை நீ யெப்பொழுதும் செய்யவுங் கூடாது, சொல்லவுங்கூடாது, நினைக்கவுங்கூடாது.

நீ பேசும்பொழுதும், தவறின்றி, பெருக்கிக் கூறாது, உண்மையா யிருக்க வேண்டும். கருத்து வேறு, வார்த்தை வேறென்று ஒருவரையும் நினையாதே; அவனது எண்ணங்கள் அவனுடைய குரு நாதனுக்குத்தான் தெரியும்; அவனுடைய செய்கைகளுக்கு நீ நினையாத காரணங்க ளிருக்கலாம். எவனைப்பற்றியாவது நீ ஏதாவதுசமாசாரம் கேட்டால், நீ அதை

வெளிப்படுத்தாதே. அது பொய்யாயி ருக்கலாம்; நிஜமாயிருந்தாலும் கூட, அதைப்பற்றி நீ ஒன்றும் பேசாமலிருப் பதே நல்லது. பேசுவதற்கு முந்தி நன் ருய் ஆலோசி. இல்லாவிட்டால், நீ தவறி விடலாம்.

செய்கையில் உண்மையா யிரு; வேஷம் போடாதே; சுத்தமான கண்ணு டியின் வழியே சூரியப் பிரகாசம் துலங் குவதுபோல, சுத்த சத்தியப் பிரகாசம் உன் வழியே பிரதி பலிக்கவேண்டும்; வேஷ அபிநயமெல்லாம் இதற்கு விரோ தம்.

எது ஸ்வலாப நோக்கம், எதுபரோப காரம், என்பதையும் நீ திட்டமாய்த்தெரிந்து கொள்ளவேண்டும். ஸ்வலாபப் பிரவர்த்தி பலவுருவங்களையுடையது; ஒரு உருவத்தில் நீ அதை ஸம்ஹரித்துவிடலாம்; அப்பொழுது அது இன்னொரு உருவத்தில் முன்பலத்தோடு தலையெடுக்கும். என்றாலும், கொஞ்சங் கொஞ்சமாய் உன் மனதை பரோபகார சிந்தையிலேயே பூர்ணப்படுத்திக்கொள்வாயாகில், உனக்கப்பொழுது ஸ்வப்பிரயோஜனத்தை யெண்ணுவதற்கே அவகாசமில்லாமலாய்விடும்.

இன்னொரு வழியிலும் நீ உன் பகுத்தறிவை விருத்தி செய்துகொள்ளவேண்

டும். ஒவ்வொருவனிடத்தும், ஒவ்வொரு வஸ்துவிலும், ஈசுவர இருப்பையறிய நீ கற்றுக்கொள்; எவ்வளவு கெடுதியாய் அவன் அல்லது அது வெளிநோக்கிற்குத் தென்பட்டாலும் பாதகமில்லை. ஈசுவர சைதன்னியம் உன்னிடத்தும் உன்சகோதரனிடத்தும் பொதுவாயிருப்பதால், அதன் வழியே அவனுக்கு நீ உதவலாம்; அச்சைதன்னியத்தை அவனிடத்து எழுப்பிவிடக்கல்; அவனிடத்துள்ள அச்சைதன்னியத்திற்கு மனுசெய்துகொள்; அப்பொழுது உனது சகோதரனை நீ குற்றத்திலிருந்து விடுவிப்பாய்.

## II

அநேகருக்கு ஆசையின்மையென்ற சாதனம் கஷ்டமுள்ளதா யிருக்கின்றது; ஏனெனில், தங்களுடைய இச்சைகளையே அவர்கள் தாங்களென்று நினைத்திருக்கின்றார்கள்; தங்களிடத்துள்ள வேறு வேறான இச்சைகளும், விருப்பு வெறுப்புகளும் போய்விட்டால், தங்களுடைய இருப்பே போய்விட்டதாக எண்ணுகின்றார்கள். இவ்விதமுள்ளவர்கள் குருநாதனை தரிசியாதவர்கள்; அவர் சந்நிதான பரிசுத்தவொளியில், அவரைப்போலாகவேண்டுமென்ற இச்சை ஒன்றுதவிர மற்றெல்லா இச்சைகளும் நசிக்கின்றன.

என்றாலும், நேரே ஸத்குரு தரிசன பாக்கியம் கிடைப்பதற்கு முந்தியே, நீ இச்சித்தால், ஆசையின்மையை அடையலாம். அநேகம் ஜனங்க ளிச்சிக்கும் திரவியம், அதிகாரம் முதலிய வஸ்துக்களை அடைவது தகுதியல்லவென்பது முந்தியே நீ பகுத்தறிவினால் தெரிந்துகொண்ட விஷயம்; இதை வாக்கினால் சொல்வது போதாது, யதார்த்தமாய் மனதிலுணரவேண்டும்; அப்பொழுது அவைகளிடமுள்ள எல்லா இச்சையும் போய்விடும்.

இது வரையில் சொல்லியதெல்லாம், இலகுவேதான்; நீ அறிந்துகொண்டால் போதுமானது. ஆனால், சிலர் சுவர்க்கானு

பவத்தை யடைய விரும்பியாவது, அல்லது, பந்த நிவர்த்தியைத் தாங்கள் மாத்திரமே பெற இஷ்டப்பட்டாவது, உலக வியாபாரங்களை விடுகிறார்கள். இத்தவறுதலில் நீ விழவேண்டாம்; உன்னை நீ முற்றிலும் மறந்திருந்தால் எப்பொழுது பந்த நிவர்த்தியாகும், எவ்வித சுவர்க்கம் கிடைக்கும் என்பதை எப்படி நீ ஆலோசித்துக்கொண்டிருக்கக்கூடும்! அடையும் பொருள் எவ்வளவு பெருமையுள்ளதாக இருக்கினும், ஸ்வதன்மையை விரும்பிய எல்லா இச்சைகளும் பந்தப்படுத்துமென்பதை நீ ஞாபகத்தில் வை; இது போனாலன்றி நீ குருநாத னேவலுக்குள் பட்டு நடக்க முழுதும் சுதந்திரனல்ல.

சுய நன்மையை நாடிய இச்சைக ளெல்லாம் போனாலுங்கூட, உனது பிரவர்த்தியின் பலனைப் பார்க்க நீ யிச்சிக்கலாம். யாருக்காவது நீ உதவி செய்தால் அவ்வுதவி எவ்வளவு பலப்பிராப்தியாயிற்று என்றறிய நீ விரும்பலாம்; அதை அவனு மறியவேண்டும், உன்னிடத்தில் அவன் நன்றி காட்டவும் வேண்டும் என்றும் நீ இச்சிக்கலாம். ஆனால் இதுவும் ஆசைதான், நம்பிக்கை யில்லாமையுங்கூட இதில் சேருகின்றது. உதவி செய்ய உன் சக்தியை நீ பொழியும் போது, நீ பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் அதற்குப் பலன் இருக்கவேண்டும்; ஈசுவர சட்டம் இவ்விதமேயென்று

நீ யதி. ஆகையால், நியாயத்தை யுத்தே
சித்தே நீ நியாயமாய் நடக்கவேண்டும்,
அதினால் வரும் வெகுமானத்தை யுத்தே
சித்தல்ல; நீ வேலை செய்யவேண்டுவது
வேலையை உத்தேசித்தேயல்லாது, அதன்
பலனைப் பார்க்கவுத்தேசித்தல்ல. உலகத்
தின்கண் உனக்கு அவ்விருக்குங்காரணத்
தால், உன்னை நீ அதற்கே அர்ப்பணம்
செய்துகொண்டு உலக கைங்கரியங்களில்
நீ யேற்படவேண்டும்.

சித்திகளுக்காசைப்படாதே; உனக்க
வைகள் வேண்டியது நன்மையென்று
குருநாதன் அறியுங்காலத்தில், அவைக
ளுனக்கு வரும். பக்குவம் வருமுன்றி

அவைகளைத் தூண்டுதல் பலகாலும் அல்லவை விளைவிக்கும்; தவிர, தந்திரமுள்ள பிரகிருதிதேவதைகள் இவ்வித சித்தர்களுக்குப் பலகாலும் தப்புவழியைக் காட்டும்; அல்லது, அச்சித்திபெற்றவர் கருவமடைந்து, தாங்கள் தப்பு செய்ய மாட்டாதவர்களென்றும் நினைக்கலாம். இது எப்படியானாலும் சரி, சித்திகளை அவைகளுடைய உபயோகிக்கும் காலத்தையும், பிரயத்தனத்தையும், பிறர்க்குதவி புரிவதில் உபயோகப்படுத்தலாம். பக்குவ காலம் வரும்பொழுது சித்திகள் வரும், வந்தே தீரும்; முந்தியே அவைகளுனக்கு வருவது பிரயோஜனகரமென்று குருநாதன் கண்டால், எவ்விதம் அவைகளைக்

கெடுதி யின்றி நீ அடையலாமென்பதை அவர் உனக்குப்போதிப்பார். அது வரையில் அவைகளில்லாமலிருப்பதே உனக்கு நல்லது.

தினசரி வாழ்க்கையில் சாதாரணமாய்ச் சம்பவிக்கின்ற சில சிறிய இச்சைகளுங்கூட உன்னையணுகாது நீ பாதுகாக்கவேண்டும். சமர்த்தனுகவாவது, உலகில் விளங்கவாவது நடிக்க இச்சிக்காதே. பேச ஆசைப்படாதே. சொல்பப் பேச்சுடன் நிற்பது நல்லது; நீ பேச விரும்புவது சத்தியமாயும், பிரியமாயும், ஹிதமாயுமிருக்குமென்று முற்றிலும் நிச்சயமாயிருந்தாலொழிய, மௌனமே நல்லது.

நீ பேசப்போவதில் இம்மூன்று நிபந்தனைகளும் இருக்கின்றனவாவென்று நீ பேசுமுன் நன்றாயாலோசித்துப்பார்; இவைகளில்லாவிடில் நீ அதைப்பேசாதே.

இதுமுதலே, நீ பேசுமுந்தி விழிப்புடன் ஆலோசித்துப் பேசும் வழக்கத்தில் நீ ஏற்படுவது நல்லது; ஏனெனில், தத்துவோபதேச தீக்ஷை பெறவரும் சமயம், உனதுவார்த்தை ஒவ்வொன்றையும் நீ கவனிக்க வேண்டிவரும்; இல்லாவிடில், சொல்லக்கூடாததை நீ சொல்லிவிடக்கூடும். மிக்க சாதாரணப்பேச்சு அனாவசியம்; அது மூடத்தனமுமாம்; அது வம்புப்பேச்சாய் விட்டால், பாபகரமாகி

றது. ஆகையால், நீ பேசுவதைவிட கேட்கப்பழகு; நேரே விரும்பினுலன்றி நீ அபிப்பிராயம் கொடாதே. அறிதல், துணிதல், தீர்மானித்தல், மௌனமாயிருத்தல், இவைகளைச் சாதனங்களாகச் சொல்வதும் ஒருமுறை; இந்நான்கில், கடைசியானது எல்லாவற்றிலும் கஷ்டமானது.

இதரமனிதர்களுடைய காரியங்களில் அனுவசியமாய்த் தலையிடுகிற இன்னொரு சாதாரணவிருப்பத்தை நீ கண்டிப்பாய் அடக்கிவிடவேண்டும். இன்னொரு மனிதன் என்ன செய்தாலென்ன, என்ன சொன்னுலென்ன, எவ்வித அபிப்பிராய

முள்ளவனானுலென்ன; இவைகள் உன்னுடைய காரியங்களல்ல; அவைகளில் ஒருவிதத்திலும் சம்பந்தப்படாமல் நீயிருக்கப்பயிலவேண்டும். வேறொருவனோடு தலையிட்டுக்கொள்ளாதவரையில், தன்னிஷ்டப்பிரகாரம் அவனுக்கு நினைக்கவும், பேசவும், செய்யவும், பூர்ணசுவாதீனமுண்டு. எது சரியென்று உனக்குத் தோன்றுகிறதோ அதை சுயேச்சையாய் செய்ய நீ உரிமை பாராட்டுகிருயல்லவா? இந்த உரிமையை அவனுக்கும் நீ அளிக்கவேண்டும்; அதை அவன் செலுத்தும்போது, அவனைக்குறித்துப்பேச உனக்கு பாத்தியமில்லை. அவன் தப்பி நடக்கிறானென்று நீ நினைத்தால், அதைத் திரு

த்த நீ சமயம் பார்த்து, உபாயந்தேடி, தனிமையாய், மரியாதை தவறாது பேச முடியுமாகில் அவன் தவறுதலை ஒரு வேளை நீ அவனுக்கு நிரூபிக்கலாம்; என்றாலும், அனேக சமயங்களில், இதுவே தகாத தலையிடுதலாய்ப் போய் விடும்; எக்காரணத்தைக்கொண்டும் மூன்றும் மனிதனிடம் நீ போய் அதைப்பற்றி அலப்பவேண்டாம்; அது ஒரு கெட்ட பாபச்செய்கையாயிருக்கிறது.

ஒரு குழந்தையையாவது, ஒரு மிருகத்தையாவது, யாராவது உபத்திரவம்செய்வதை நீ கண்டால், அதை நீ தடுக்கப் பிரவேசிப்பது உனது கடமை. எவனாவது

ராஜாங்க சட்டத்திற்கு விரோதமாய் நடப்பதை நீ பார்த்தால், அதிகாரிகளிடம் நீ அதைத் தெரிவிக்கவேண்டும். உன்னிடம் கற்க வேறொருவன் உன் கீழ் வருவானாகில் அவனுடைய தப்பிதங்களை அவனுக்கு நீ சாந்தமாய்ச் சொல்வது உன் கடமையாக ஏற்படலாம். இவ்விதங்களில்தவிர, உன் சொந்த காரியத்தைக் கவனி; மௌனமாகிற நற்குணத்தை நீ கற்றுக்கொள்.

## III

பிரத்தியேகமாய் நன்னடத்தையை விளக்குகின்ற இந்த ஆறு நற்குணங்களும் குருநாதனால் உபதேசிக்கப்பட்டன.

1. மனோநிக்கிரஹம்.
2. இந்திரிய நிக்கிரஹம்,
3. க்ஷமை.
4. சந்துஷ்டி.
5. ஏகாக்கிரதை.
6. திடநிச்சயம்.

[இவைகளிற்சிலவற்றிற்கு வேறு நாம தேயங்களை உபயோகித்தும், சாதனங்களுக்கேபெயர் வேறாய் வழங்கியும்வருவது

எனக்குத்தெரியுமென்றாலும், இங்கே நானுபயோகிக்கும் எல்லாப் பெயர்களும் எனக்கு கற்பிக்கும்போது குருநாதரே எனக்கு உபயோகித்த வார்த்தைகளேயாம்]

1. மனோ நிக்கிரஹம்.

காமசரீரம் வசப்பட வேண்டுமென்பது ஆசையின்மையென்ற சாதனத்தின் அர்த்தம்; மானஸீக சரீரமும் வசப்படவேண்டுமென்பதும் இதில் நின்று ஏற்படுகின்றது. அதாவது, பதட்டம் வராமல் மனம் நிலைபெறுவது; கலக்கமற்று அது சாந்தமடைவது; மனதின் துவாரா, சரீர நாடிகளும் கூடியவரையில் அமுற்சியடையாதிருப்பது. இக்கடைசியது கஷ்டப்பட்டு லபி

க்கவேண்டும். ஏனெனில், நீ மேன்மார்க்க த்திற்கு ஆயத்தப்பட முயலுகையில், உன து சரீரவுணர்ச்சி கூர்மைப்படுவது அவசிய மாகிறது; ஆகையால், ஒரு சப்தம் ஒரு அதிர்ச்சி உண்டானல், அதன் நாடிகள் எளிதில் சலனப்பட்டுக் கலங்கும். என்று லும், கூடியவரையில் முயன்று நீ சரிப்படு த்திக் கொள்ளவேண்டும்.

சாந்தமடைந்த மனது என்றால் மனத் தைரியம் என்றும் அர்த்தம்; ஆகையால், மேன்மார்க்கத்தில் நேரிடும் கஷ்ட நிஷ்டூரங் களை நீ அச்சமின்றி யெதிர்க்கலாம். அத ற்கு மன உறுதியென்றும் இன்னொரு அர் த்தம்; ஆகையால், தினசரிவாழ்க்கையில்

நேரிடும் சங்கடங்களை இலகு வாக்கிக்கொள்ளவும், பெரும்பான்மையோர் தங்கள் மிக்க காலத்தை விருதாவில் போக்கிக்கொள்வது போலல்லாது அவ்வித கிலேசத்தை அல்பவிஷயங்களில், நீ அடையாமல் நிவர்த்தித்துக் கொள்ளவும், உன்னால் கூடும். விசனம், துன்பம், வியாதி, நஷ்டம் இவை போன்ற வெளியினின்று நேரிடும் விஷயங்களால் மனிதனுக்கு ஒரு பாதகமுமில்லையென்று குருநாதன் உபதேசிக்கின்றார்; மனச்சமாதானத்தை இவைகள் கெடுத்துவிடாதபடி மாத்திரம் பார்க்கவேண்டும். இவைகள் சென்ற கர்மாக்களின் பலன்கள்; இவைகள் வரும்பொழுது, இவைகளை நீ சந்துஷ்டியுடன் அனுபவிக்கவேண்டும்; கெ

டுதி எதுவானாலும் நிலையில்லாததென்பதை ஞாபகத்தில் வைத்து, நீ யெப்பொழுதும் அமைவுடன், சந்தோஷியாயிருக்கவேண்டியது உனது கடமை. அவைகள் உன்முன் ஜன்மங்களைச் சேர்ந்தவைகள்; இஜ்ஜன்மத்தவைகளல்ல; மாற்றமுடியாதவைகள்; ஆ. கையால், அவைகளைக் குறித்து நீ வருந்துவது நிஷ்பிரயோஜனம். இவைகளை நினையாது, இப்பொழுது நீ செய்யும் செய்கைகளைக்கவனி; இவைகள் உனது அடுத்த ஜன்மத்துக்குரியவைகள்; அதை நீ மாற்ற முடியும்.

மனத் தளர்ச்சிக்கும், சோகத்திற்கும் நீ இடங்கொடாதே. மனத்தளர்ச்சி பிச

கானது; ஏனெனில், அது வேறு மனிதர்களையும் கூட துயரத்திற் குள்ளாக்கி, அவர்களது வாழ்க்கையையும் அதிக சங்கடத்துக் குள்படுத்துகின்றது; இவ்விதம் செய்வது உனக்கு சரியல்ல. ஆகையால் உனக்கது எப்பொழுதாவது சம்பவித்தால், அதை உடனே நிதியஜித்துவிடு.

• வேறொரு விதமாயும் நீயுன் மனதை வசப்படுத்தவேண்டும்; அதைத் திரிந்துகொண்டிருக்க விடவேண்டாம். எந்தக் காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும், அதிலேயே உன் மனதை நிறுத்து. அப்பொழுது, அக்காரியம் நன்றாய்ச் செய்யப்பட்டு முடியும்; தொடுத்த காரி

பம் முடிந்ததும் அவைகள் வரும்படி, நல்ல எண்ணங்கள் எப்பொழுதும் உன் மனதைப் பின்பற்றி நிற்கட்டும்.

நற்காரியங்களில் உன் மனச் சக்தியை எப்போதும் உபயோகி; ஜீவபூத விஸர்க்கத்துக்கு நீ அனுகூலமான ஒரு சக்தியாய் ஏற்படு. துக்கத்திலாவது கஷ்டத்திலாவது, சகாயத்தை விரும்பியாவது, இருப்பதாக உனக்குத் தெரிந்திருக்கும் யாரையேனும் ஆலோசித்தறிந்து, அவன் மேல் அன்புடன் உன் சித்த விருத்தியை ஊற்று.

கர்வத்தினின்று உன் மனதை நீக்கு; ஏனெனில், கர்வம் அறிவீனத்தினின்றே வருகின்றது. ஞானமில்லாதவன், தன்னை பெரியவன் என்றும், இது அது என்று குறித்துக் காட்டக்கூடிய பெரிய காரியங்களைச் செய்தவனென்றும், நினைக்கின்றான்; ஈசுவரன் ஒருவர்தான் பெரியவர், அவரால்தான் எல்லா நற் காரியங்களும் செய்யப்படுகின்றன, என்று விவேகி யறிகிறான்.

## 2. இந்திரிய நிக்கிரஹம்.

உன்னுடைய சித்தவிருத்தி இருக்க வேண்டியபடி யிருந்தால், உனது செய்கைகளைப்பற்றி கவலையிராது. என்றாலும்

மனிதர்களுக் குபகாரியா யிருப்பதற்கு சித்த விருத்தி காரியப்பட வேண்டும். சோம்பல் கூடாது; நற்காரியத்தில் சதா பிரவர்த்தி வேண்டும். ஆனால் அது நீ செய்யவேண்டிய உன் சொந்த கடமையா யிருக்கவேண்டும்; மற்றொருவனுடையதா யிருத்தல் கூடாது; மற்றொருவனது கடமைகளையும் அவன் அனுமதியின் பேரில் அவனுக்கு உதவியாக நீ செய்யலாம். ஒவ்வொரு மனிதனையும் அவன் வழியிலேயே அவன் சொந்த வேலையைச் செய்யும்படி விட்டுவிடு; அவசியம் நேரிடும் சமயத்தில் நீ உதவி செய்ய எப்பொழுதும் தயாராயிரு; ஒருபோழுதும் இதரருடைய காரியங்களில் தலையிடாதே.

அனேக ஜனங்களுக்கு தங்கள் சொந்த காரியங்களை மாத்திரம் கவனித்து நடக்கப் பயிலுவது உலகில் அத்தியந்த கஷ்டமான விஷயமாயிருக்கின்றது. ஆனால் இதைத்தான் நீ நன்றாய்க் கவனித்து நடக்கவேண்டும்.

•

உயர்வான வேலையை நீ செய்ய முயலுகிற காரணத்தினாலேயே, உனது சாதாரண கடமைகளை நீ மறக்கக்கூடாது; இவைகள் செய்யப்படாவிட்டால், வேறு கைங்கரியத்திற்கு நீ சுதந்திரன் அல்ல, புதிதாய் நீ ஒரு பிரபஞ்சப் பிரவர்த்தியையும் ஆரம்பிக்கவேண்டாம்; முந்தியே உனக்கேற்பட்டுள்ள, நீ அங்கீகரிக்கின்ற,

நியாயமான கடமைகளை நீ பூர்ணமாய் நிறைவேற்றவேண்டும்; ஆனால், இவ்வித கடமைகள் இதரர்கள் உன்மேல் சுமத்துகின்ற கற்பனை கடமைகளாக இருக்கக் கூடாது. குருநாதனுக்கு நீ சொந்தமாகில் உன்னுடைய கிரமமான காரியங்களை, மற்றவர்களைவிடக் குறைவாயல்லாது, நீ மேலாய்ச் செய்யவேண்டும்; ஏனென்றால் அவைகளைக்கூட நீ அவர் நிமித்தமே செய்யவேண்டும்.

3. க்ஷமை.

நீ எல்லாரிடத்தும் பூர்ண க்ஷமையுள்ளவனாகவும், உன் சொந்த மதத்தில் உனக்கிருக்கும் அபிமானம்போல, இதர

மதஸ்தர்கள் கொண்டிருக்கும் கொள்கை களிலும் நீ மனப்பூர்வமான அபிமான முள்ளவனாகவும், இருக்க வேண்டும்; ஏனெனில், இதர மதங்களும், உன் மத மெப்படியோ அப்படியே பரமபதத்திற்கு வழிகள்; எல்லாவற்றையும் அறிந்தால் தான் நீ எல்லாருக்கும் உதவி செய்ய முடியும்.

ஆனால், இப்பூரண க்ஷமையை நீ யடைவதற்கு, முதலில் நீயே ஆராயாத பிடிவாத பக்தியையும், மித்தியா தரு மத்தையும் விடல் வேண்டும். ஆடம்பரக் கிரியைகள் அனாவசியமென்று நீ உணர வேண்டும்; இல்லாவிடில், அவைகளைச்

செய்யாதவர்களை விட உன்னை நீ சிரேஷ்டனென்று நினைப்பாய்; என்றாலும், இன்னும், அவைகளைப் பற்றி நிற்பவர்களை நிந்திக்கவேண்டாம். அவர்களிஷ்டம்போல் அவர்கள் நடக்கட்டும்; ஆனல், அவர்களும் தத்துவத்தை யறிகின்ற உன்னிடம் தீலயிட வேண்டாம்; எக்கருமத்திற்கு மேற்பட்டு நீ போய்விட்டாயோ அக்கருமத்தை உன்னைச் செய்யும்படி அவர்களும் பலவந்தம் செய்ய முயலக்கூடாது. எதனிடத்தும் அனுகூலமாயிரு; எதற்கும் இணங்கிநட.

உன் கண்கள் இப்பொழுது திறக்கப்பட்டிருக்கின்றன; நீ முக்தி கொண்டிருக்க

சில கொள்கைகளும், சில ஆசாரங்களும், புத்திக்கொவ்வாதவை யென்று நீ காண லாம்; உண்மையிலேயே அவைகள் ஒருக் கால் அவ்வித மிருக்கலாம்; என்றாலும் அவைகளில் இனி நீ சம்பந்தப்படமுடி யாவிட்டாலும், வேறு சில நன்மனமுள்ள ஜனங்களுக்கு அவைகள் முக்கியமாக இருக்கும் நிமித்தம், அவைகளை நீ கௌரவப்படுத்து. ஒரு படியில் அவைக ளவசியம்; அவைகள் பிரயோஜனகரம்; அவைகள், இப்போது, நீ நேராயும் ஒழுங்காயும் எழுதுவதற்கு உனக்கு உன் குழந்தைப் பருவத்தில் உபயோகமா யிருந்த இரட்டை ரேகைகள் போன் றவை. ஒருகாலத்தில் அவைகள் உனக்கு

ஆவசியகரமா யிருந்தன; அக்காலம் இப்பொழுது சென்றுவிட்டது.

ஒரு காலத்தில் ஒரு பெரிய ஆசாரியன் பின் வருமாறு எழுதினுர்:—"குழந்தைப் பருவத்தில் நான் குழந்தையாய்ப் பேசினேன், குழந்தையாய்க் கற்றேன், குழந்தையாய்ச் சிந்தித்தேன்; நான் வளர்ந்து புருஷனுனவுடன், அக்குழந்தை விஷயங்களை ஒதுக்கிவிட்டேன்." ஆகையால், குழந்தைப் பருவத்தை மறந்து, ஒருவனுக்கு குழந்தைகளிடத்து ஸஹானுபவம் போய்விட்டால், அவன் குழந்தைகளுக்குக் கற்பிக்கவும், உதவியளிக்கவும் யோக்கியனல்ல. ஆனதால், பௌத்

தன், ஹிந்து, ஜெய்னன், யூதன், கிரஸ்தவன், மஹம்மதியன், என்ற வித்தியாசமின்றி, எல்லாரிடத்தும் அனுகூலமாயும், சாந்தமாயும், க்ஷமையாயும் இரு.

4. சந்துஷ்டி.

உனது கர்மாநுபவம் எதுவாயிருந்தாலும், அதை சந்துஷ்டியுடன் அனுபவி; உனக்கு நேரிடும் கஷ்டத்தை கௌரவமாக நினை; ஏனெனில், கர்மதேவதைகள் நீ அவர்களது உதவிபெறத் தகுந்தவனென்று உன்னைக் கருதினார்களென ஏற்படுகின்றது. உனது சங்கடம் எத்தனை கொடிதாய் இருக்குமானாலும், கவனியாதே; இன்னும் அது அதிகமாய்

ஏற்படாததைப்பற்றி நன்றியுள்ளவனயிரு. உனது கெட்ட கர்மா அநுபவித்துப் போய், நீ ஸ்வதந்திரனாக ஏற்படாத வரையில் குருநாதனுக்கு நீ உபயோககர மாயிருக்கமாட்டா யென்பதை ஞாபகத் தில் வை. உன்னை நீ குருநாதனுக்கு அர்ப்பிதஞ் செய்துகொண்ட காரணத்தினா லேயே, உனது கர்மா சீக்கிரம் முடிவு பெற வேண்டுமென்று நீ கேட்டதாகி றது; ஆகையால் ஒரு நூறு ஜன்மங் களுக்குத் தொடர்ந்து பரவிக்கிடக்கவேண் டிய கருமத்தை, இரண்டொரு ஜன்மங் களிலிப்பொழுது நீ அனுபவிக்கவேண்டி யதாய் நேரிடுகின்றது. இதை நீ லகு வாய்த்தள்ளிவிட இதைக் களிப்புடனும்,

சந்துஷ்டியுடனும் பொருத்துக்கொள்ள வேண்டும்.

ஆயினும், இன்னொரு விஷயம். உனக்குச் சொந்தம் என்ற பாவனையை நீ ஒழித்துவிடவேண்டும். நீ அதிகமாய் விரும்பும் வஸ்துக்களையும், நீ மிகவும் அருமையாய் நேசிக்கும் ஜனங்களையும் கூட, கர்மா உன்னைவிட்டு நீக்கிவிடலாம்; அப்பொழுதுங்கூட நீ சந்துஷ்டனாயிரு; எந்த வஸ்துவையும், எவ்வித வஸ்துவையும் விடுவதற்குச் சித்தமாயிரு. தனது சிஷ்யன் மூலமாகவே, இதரர்களுக்குத் தன் சக்தியைப் பிரவேசிக்கும்படி செய்வது குருநாதனுக்கு அடுத்

நடுத்து நேரிடும் ஆவசிய மாகின்றது; சிஷ்யன் மனச் சோர்வடைந்தால், அது முடியாது; ஆகையால், சந்துஷ்டியே நியமமாய் விடவேண்டும்.

5. ஏகாக்கிரதை.

உன் முன்னிலையில் நீயேற்படுத்திக் கொள்ளவேண்டிய முக்கியதர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்வதேயாம். வேறு எவ்வேலையைச் செய்ய உனக்கு சம்பவித்தாலும், இதை நீ யெப்பொழுதும் மறக்க வேண்டாம். வேறெந்தவேலையும் நீ செய்யும் படி வரக்கூடாது; ஏனெனில், எந்த பரோபகார, ஸ்வலாப நோக்கற்ற வேலையும் குருநாதனுடையதே; அதை நீ அவர் நிமித்

தம் செய்யவேண்டும். அதைச்செய்யும் பொழுது, அதன் ஒவ்வொரு கூறிலும் உனது கவனம் முழுமையும் செலுத்திச் செய்; எவ்வளவு நன்றாய்ச் செய்ய உன்னால் முடியுமோ அவ்வளவு நன்றாய் அது செய்யப்படவேண்டும். அதே மஹாசாரியன், எழுதியிருக்கிறார்:— "நீ எதைச் செய்தாலும், மனிதர்களுக்காக அல்லாது, ஈசுவரனை உத்தேசித்து மனப் பூர்வமாய்ச் செய்" குருநாதன் பார்க்க உடனே வருவதாக நீ தெரிந்தால், ஒரு வேலையை நீ யெப்படிச் செய்வாயென் பதை ஆலோசி; நீ செய்யும் எல்லா வேலைகளையும், இவ்விதம் ஆலோசித்துச் செய்யவேண்டும் அறிவில் சிறந்தவர்கள்

தான் மேற்குறித்தவாக்கியத்தின் அர்த் தத்தைப் பெரும்பாலும் அறிவார்கள். அதைப்போல இன்னும் புராதீனமான இன்னெருவாக்கிய மிருக்கின்றது. "உன் கையிலெந்த வேலை நேரிடுகின்றதோ, அதை உன் பராக்கிரமத்தோடுசெய்".

•

ஏகாக்கிரத்துக்கு இன்னெரு அர்த்தம் நீ பிரவேசித்திருக்கும் மார்க்கத்திலிருந்து உன்னை ஒரு நிமிஷங்கூட ஒன்றும் திருப் பாதிருத்தல். எந்த மயக்கப்பொருள்களும், உலகசுகங்களும், உலக அபிமானங்களும், உன்னை யெவ்வேளையிலேனும் அம்மார்க் கத்தினின்று இழுத்துவிட வேண்டாம். ஏனெனில், நீயே அம்மார்க்கத்தில் ஒரு

மைப்பட்டுவிட வேண்டும். அம்மார்க்கத்தை யநுசரிக்க நீ ஆலோசிக்கவேண்டிய அவ சியமில்லாத ஸ்திதியில் அது உன் ஸ்வபா வகரமாய் ஆய்விடவேண்டும். ஆத்மாவாகிய நீ தீர்மானித்து விட்டாய்; அதிலிருந்து தப்பிப் போவதென்றால் உன்னிலிருந்து நீ தப்பிப்போகிறதாகிறது.

6. திட நிச்சயம்.

உனது குருநாதனை நீ நம்பவேண்டும்; உன்னையே நீ நம்பவேண்டும். குருநாதனை நீ பார்த்து விட்டால், அனேகஜன்மங்களு க்கு உனக்கு அவரிடம் திட நம்பிக்கை யேற்பட்டு விடும். இன்னும் நீ அவரைப் பார்த்திராவிட்டாலும், அவரை நீ பார்த்

ததுபோல் தியானித்து நிச்சயித்து, அவரை நீ விசுவசிக்க பிரயத்தனஞ் செய்ய வேண்டும். ஏனெனில், இவ்விதம் நீ முயலாவிட்டால், அவருக்கும் உனக்கு சஹாயிக்க முடியாது. பூர்ண நம்பிக்கை யேற்படாதவரையில், அவரது அன்பும் சக்தியும் உன்னிடம் செல்லா.

உன்னையே நீ நம்பவேண்டும். உன்னையே நீ நன்றாயறிந்ததாக நினைக்கிறாயா? அவ்விதம் நீ உணர்ந்தால், உன்னையே நீ அறியவில்லை; சகதியிலடிக்கடி விழுந்துகொண்டிருக்கின்ற துர்ப்பலமான மேலோட்டை மாத்திரம் நீ தெரிந்தவனாகிறாய். ஆனால், நீ யதார்த்தமான நீ அந்த நீ, ஈஸ்

வர ஜாவாலியின் பொதியேயாம். சர்வவல்லமையுள்ள ஈசுவரன் உன்னுள்ளிருக்கின்ருன்; ஆகையினுல் நீ சங்கற்பித்தால் செய்யக்கூடாத காரியமொன்றுமில்லை. பின்வருமாறு உனக்குள்ளாகவே நீ ஆலோசி:- "மனிதன் எதைச் செய்திருக்கின்ருனே, அதை மனிதன் செய்யக் கூடும் நான் ஒரு மனிதனுயிருக்கிறேன், மேலும் மனிதனில் ஈசுவரனுயு மிருக்கிறேன்; என்னுலிக் காரியம் செய்யக்கூடும், நான் செய்வேன்" மேன்மார்க்கத்திலடிவைக்க வேண்டுமானுல், உன் சங்கற்பம் தோய்க்கப்பட்ட எஃகுபோலிருக்கவேண்டும்.

---

# VI.

எல்லாச்சாதனங்களிலும் அன்பு மிகவும் முக்கியமானது; ஏனெனில், அது ஒரு மனிதனிடம் போதிய பலமுள்ளதாயிருக்குமாயின், மற்றவைகளையெல்லாம் சம்பாதித்துக்கொள்ள அது தூண்டும்; அஃதின்றி, மற்ற நற்குணங்களெல்லாம் சேர்ந்தும், ஒருபோதும் போதியவைகளாகா. ஜனனமரண ஸம்ஸார சக்கரத்தினின்று விடுபட்டு, ஈசுவரனோடு ஐக்கியப்படக்கோரும் தீக்ஷண இச்சை யென்று, அது சாதாரணமாய் அர்த்தஞ் செய்யப்படுகின்றது. ஆனால், அதை இப்படிக்கிரஹிப்பது, ஸ்வலாபநோக்க மென்றாகிறது; அத

ன் பூர்ணதாத்பரியம் ஆகவில்லை. அது அடையவிரும்பும் ஒரு ஆசையல்ல, அது ஒருஸங்கல்பம், தீர்மானம், நிர்ணயம். இச் சங்கற்பம் சித்திபெறவேண்டுமாயின், அது உனது பூர்ண சுபாவகுணமாயாகி, வேறு ஒரு குணமும் வர இடங்கொடாதிருக்க வேண்டும். உண்மையில், அது ஈசுவர ஞேடு ஒன்று கூடி யிருக்கவிரும்பும் இச் சைதானென்றலும், உன் சொந்த ஆயா சம், வருத்தம், இவைகளிலிருந்து நீ விலக அல்ல; ஆனல், உனக்கு ஈசுவரனிடமிரு க்கும் அத்தியந்தம் பக்தியால், அவர் மார்க் கத்தை யநுசரித்து, அவர் செய்வது போல் செய்வது. அன்பே அவர் ஆகை யால், அவருடன் நீ ஐக்கியப்பட இச்சித்

தால், நீ ஸ்வலாபேக்ஷையை முழுமையும் விட்டு, அத்தியந்தம் பிரேமையோடு கூடினவனாகவேண்டும்.

தினசரிபிரவர்த்தியில், இதற்கு இரண்டு வித பிரயோகம்; (1) எந்த உயிருள்ள வஸ்துவுக்கும் ஒரு ஹிம்சையையும் செய்யாதிருக்கக் கருத்துக் கொள்வது; (2) எப்பொழுதும் பிறருக்குதவி செய்ய சமயம் நோக்கி நிற்பது.

முதலாவது. ஹிம்சை செய்யாமை. வம்புப் பேச்சு, கொடுஞ்செயல், மித்தியா தர்மம், இம்மூன் றுபாபகாரியங்களும், அன்புக்கு விரோதிகளாகையால்,

இவைகள் மற்றெல்லாப் பாப காரியங்க ளையும்விட, உலகத்தில் அதிகக் கெடு தியை விளைவிக்கின்றன. ஹிருதயத்தில் ஈசுவர பக்தி நிறைய இச்சிக்கும் மனி தன் இம்மூன்று தீயகுணங்கள் தன்னை யணுகாதுசதா விழிப்பா யிருக்கவேண்டும்.

•

வம்புப்பேச்சு இன்னது செய்யுமென்ப தைக்கவனி. அதற்கு ஜனனம் கெட்ட எ ண்ணத்தில்; அதுவே ஒரு பாதகம். ஏனெ னில், ஒவ்வொருவனிடமும், ஒவ்வொரு வஸ்துவிலும் நன்மை நிற்கின்றது; அவ்வி தமே, ஒவ்வொருவனிடமும், ஒவ்வொரு வஸ்துவிலும் கெடுதியுமிருக்கின்றது. நம து சித்தவிருத்திப் பிரயோகத்தால், இவ்வி

ரண்டையும் நாம்விருத்திசெய்யலாம்; இவ்விதமாய், ஜீவபூத விஸர்க்கத்திற்கு, நாம் அநுகூலமாயாவது, விக்கினமாயாவது ஏற்படலாம்; நாம் ஈசுவர சங்கற்பத்தை அநுசரிக்கலாம், அல்லது எதிர்க்கலாம். இன்னொருவனிடமுள்ள கெடுதியை நீ நினைப்பாயாகில், மூன்று கெட்டகாரியங்களை நீ அதோடு கூடவே செய்கின்றாய்:—

(1) உன்னைச் சுற்றிலும் நல்ல சித்தவிருத்தியைவிட்டு, கெட்ட சித்தவிருத்தியை வியாபிக்கச் செய்துகொண்டு, உலகத்தில் துக்காபிவிருத்தியைச் செய்கின்றாய்.

(2) நீ நினைத்த கெடுதி அம்மனிதனிடத்தில் இருக்குமானால், அதை நீ போஷித்

துப் பலப்படுத்துகிறாய்; நீ உனது சகோத
ரனைக் குணப்படுத்த வேண்டியிருக்க, இவ்
விதம் நீ அவனை மிக்கக் கெட்டவனாக்கி
விடுகிறாய். தவிர, அனேகமாய்க் கெடுதி
அங்கே யிராதிருக்கலாம்; அது உன்பாவ
னையாகவே யிருக்கலாம்; அப்பொழுது,
உன் கெட்ட எண்ணம் உன் சகோதரனைத்
தப்பிதஞ்செய்ய ஏவுகிறது; ஏனெனில்,
அவனின்னும் பூரணபி விருத்தி யடைந்தி
ராவிடில், அவனை நீ உன் பாவனாரூபமாக
ஆக்கிவிடலாம்.

—(3) நல்ல எண்ணங்களோடு உன் சித்த
விருத்தி நிறைந்திருக்க வேண்டியிருக்க,
உனது கெட்ட எண்ணங்களால் அதை நீ

நிறப்பிக்கொள்ளுகிறாய்; உனது அபிவிருத்தியும் மங்குகின்றது; தவிர, உன்மேல் ரூபத்தைப் பார்க்கக்கூடியவர்களுக்கு, நீ ஒரு சிறந்த, விரும்பத்தக்க, ரூபமாக இராது, ஒரு அவலக்ஷணமான, சகித்தற்கரிய, வஸ்துவாக ஆய்விடுகிறாய்.

•

தனக்கும் தன்னுடைய பலியாய் ஏற்பட்டவனுக்கும், இவ்வளவு தீங்கு விளைவித்ததோடு திருப்தியடையாத, இவ்விதவம்பன் வேறு மனிதர்களையும் தன் பாதகத் தொழிலுக்கு கூட்டாளிகளாகச் செய்து கொள்ள, தன்னாலியன்றமட்டும் முயலுகிறான்; தனது நெறிகெட்ட கதையை அவர்களுக்காவலோடு சொல்லி, அதையவர்கள்

நம்பவேண்டுமென்றும் இச்சிக்கிறான்; பி
றகு, இவனோடு அவர்களும் சேர்ந்து, அ
ந்த எளிய வருந்துவோன்மீது கெட்ட
சிந்தைகளைப் பிரயோகிக்கிறார்கள். இவ்
வாறு நாள்தோறும் இவ்வபவாதம் ஒரு
மனிதனால் அல்ல, ஆயிரக்கணக்கானவர்
களால் விருத்தியடைகின்றது. இப்பாவச்
செய்கை எவ்வளவு இழிவுள்ளதென்றும்
பயங்கரமானதென்றும் நீ தெரிந்துகொள்
ளத் தொடங்குவாயா? இதை நீ முற்றி
லும் ஒழிக்கவேண்டும். ஒருவனையும் நீ
இகழ்ந்து பேசாதே. வேறுயாரையேனும்
இன்னொருவர் இகழ்ந்து பேசினாலும், நீ
செவி கொடாதே. நீ யவனுக்குச் சாந்த
மாய்ச் சொல்லு:—"நீ சொல்வதொருக்

கால் நிஜமல்லாமலிருக்கலாம்; நிஜமாயிருந்தாலுங்கூட, அதைப்பற்றிப் பேசாதிருப்பது மிக்க அன்புள்ளது."

பின்னர், கொடுஞ்செயலைப்பற்றி. இது இரண்டுவிதம்:—கருதிச்செய்தல், கருதாது செய்தல், வேண்டுமென்றே வேறொரு ஜீவஜந்துவுக்கு உபத்திரவஞ் செய்வது கருதிச் செய்யும் கொடுஞ்செயலாம்; இது மனுஷப் பிரவர்த்தியல்ல, அசுரச்செய்கை; எல்லாப் பாவங்களிலும் இது பெரிது. ஒரு மனிதனும் இவ்விதகாரியம் செய்யக் கூடாதென்று நீ சொல்வாயானாலும், மனிதர்கள் பல தடவைகளில் அதைச் செய்திருக்கிறார்கள், இப்பொழுதும் செய்துகொ

ண்டிருக்கிறார்கள். சமயவிசாரணை சங்கத்தார் இதைச் செய்தார்கள்; தங்கள் மதத்தின் பெயரால் இதை மதாபிமானிகளும் செய்தார்கள். ஜீவதேசு பரீட்சிதர்கள் இதைச் செய்கிறார்கள்; அனேகம் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் இதை வழக்கமாய்ச் செய்கிறார்கள். இவர்களெல்லாரும் இதை வழக்கமென்று சொல்லி, தங்கள் துஷ்டச் செய்கை க்ஷமிக்கப்பட முயலுகிறார்கள்; ஆனால், அனேகர்கள் செய்கின்ற காரணத்தாலேயே, ஒரு பாதகம் பாதகமாயிராமல் போகாது. கருமச் சட்டம் வழக்கத்தைக் கவனிக்காது; கொடுமைச் செயலாலேற்படும் கர்மா, எல்லாக் கெட்ட கர்மாக்களிலும் மிகப்பயங்கரமா

னது. இந்த இந்தியா தேசத்திலும்கூட இவ்வித வழக்கங்களுக்கு நியாயம் ஏற்படலாமோ! ஏனெனில், இங்கே அஹிம்ஸா தர்மம் எல்லார்க்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம். வெளியிற்சென்று, வேட்டை விளையாட்டென்று சொல்லி, புத்தி பூர்வமாய், ஈசுவர சிருஷ்டிகளாகிய ஜீவஜந்துக்களைக் கொல்பவர்களின் கதியும், கொடுமை செய்கிறவர்களுடைய கதியும் ஒன்றே.

இவைபோன்ற செய்கைகளை நீ செய்யமாட்டாயென்பது எனக்குத் தெரியும்; ஈசுவர பக்தியை உத்தேசித்தே, சமயம் நேரிடும்பொழுது, இவ்வித கருமங்கள் கூடாதென்று நீ தெளிவாய் எடுத்துரைக்

சவேண்டும். இக்கொடுமை, செய்கையில் மாத்திரமல்ல, வாய்ப்பேச்சிலும் இருக்கின்றது; இன்னொருவனுக்குத் துன்பஞ் செய்யக்கருதிப் பேசுகிறவன், இக்குற்றத்திற்குள்ளாகிறான். அதையும் நீ செய்யவேண்டாம்; ஆனால், சிற்சில சமயம் கவனியாது சொல்லுமொரு வார்த்தை, வன்மத்துடன் சொல்லியவார்த்தை போல் துன்பத்தை விளைவிக்கின்றது. ஆகையால் அறியாமல் கூட, நீ உன்னைக்கொடுமைக் கிரியைகளுக்குள்படுத்திக் கொள்ளாது, ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

சாதாரணமாய் இது ஆலோசியாமல் நேரிடுகிறது. பணத்திலும், இதரபொரு

ள்களினுமுள்ள மிகுந்த பேரவாவால் தான், மற்றவர்களுக்குச் செய்யும் உபத்திரவத்தை ஒரு பொழுதும் நினைக்கிறதேயில்லை; ஒருவன் தான் நியாயமாய்க் கொடுக்கவேண்டிய சம்பளம், கூலி இவைகளைப் பிடித்துக்கொள்ளுகிறான்; மற்றொருவன் தன் மனைவி மக்களுக்கு தக்க உணவு அளிக்கிறானில்லை; இன்னொருவன் தன் துராசையை திருப்தி செய்துகொள்ளுவதில் மாத்திரம் கவனமாயிருக்கிறான்; அதனால் எத்தனை ஆத்மாக்களையும், சரீரங்களையும், தான் கெடுத்துவிடுகிறானென்பதில் கவலையேயில்லை. ஒரு மனிதன், தன்னுடைய சொல்ப தொந்திரவை யுத்தேசித்து, தன்னுடைய வேலை

யாட்களுக்கு குறித்த தினத்தில் சம்பளங் கொடுக்கிறதில்லை, அவர்களுக்கதனுலுண் டாகும் கஷ்டங்களையும் நினைக்கிறதில்லை. ஒரு செய்கை யெவ்விதம் இதரர்களைப் பாதிக்குமென்பதை ஜாக்கிரதைக் குறை வால் கவனியாது, மறந்து விடுவதால், அதிக துன்பமுண்டாகின்றது. ஆனல் கர்மாவுக்கொருபொழுதும் மறதி கிடை யாது; மனிதர்கள் மறந்து போகிருர்க ளென்பதையும் அது கவனிக்கிறதில்லை. உனக்கு மேன்மார்க்கத்தில் பிரவேசிக்க இஷ்டமிருந்தால், நீ செய்யும் காரியங் கள் என்ன பலன்களை விளைவிக்குமென்று நீ ஆலோசிக்கவேண்டும்; இல்லாவிடில்,

யோசியாமல் நீ கொடும் பாதகங்களுக்கு உட்பட்டுவிடவேண்டிவரும்.

மித்தியா தர்மம் இன்னொரு வலிய கேடு; இது மிக்க பயங்கர பாதகத்தை யுண்டாக்கி யிருக்கின்றது. இதற்கடிமைப்பட்டவன், தன்னைவிட அறிவுள்ளவர்களை நிந்தித்து, தான் செய்யும் பிரகாரம் அவர்களையும் செய்யும்படி பலவந்தம் செய்கிறான், பிராணிகளைப் பலி கொடுக்கவேண்டுமென்பது மித்தியா தர்மம்; இதைப்பார்க்கிலும் கொடிய மித்தியாதர்மம், மனிதன் தனது ஆகாரத்திற்கு மாமிசத்தை ஆவசியகப்படுத்துவது; இவ்விருவகையிலுமுண்டாகும் பயங்கரமான

மிருகவதைதயை, நீ ஆலோசித்து நிதானி. நமக்கபிமானமுள்ள இவ்விந்தியாவில், மித்தியாதர்மம், தாழ்ந்த ஜாதியார்களை யெவ்விதம் நடத்திவருகின்றதென்பதைக் கருதிப்பார்; இக்கெட்ட குணம், சகோதர பாவத்தின் கடமையை அறிந்தவர்களுக்குள்ளும்கூட, எத்தனை நெஞ்சம் புண்படச்செய்கின்ற அன்பற்ற கொடுமையை உண்டாக்கக்கூடியதென்பதையும் நீ கவனி. இக்கொடிய மாயா தர்ம மயக்கத்திக்குள்பட்டு, அன்பே வடிவாய்க் கொண்ட ஈச்வரன் பெயரை வைத்தே, அநேகம் பாதகங்கள் நடந்திருக்கின்றன; ஆகையால், நீ மிகவும் ஜாக்கிரதையா

யிரு; அதன் அற்ப அடையாளம்கூட உன்னிடத்தில் வேண்டாம்.

இம்மூன்று வலிய பாதகங்களை நீ விலக்கவேண்டும்; இவைகள் அன்புக்கு விரோதமான பாபங்களாகையால், எல்லா அபிவிருத்தியையும் கெடுத்துவிடும்; நீ கெடுதியைச் செய்யாமலிருந்தால் மாத்திரம் போதாது; நன்மை செய்வதில் நீ துரிதமுள்ளவனா யிருக்கவேண்டும். பர கைங்கரிய விருப்பம் உன்னிடம் தீக்ஷண்ணியப்பட்டு, அதனால் நீ நிறைந்தவனாய், உன்னைச் சுற்றுமிருக்கும் மனிதர்கள் மாத்திரமல்லாது, புல் பூண்டு மிருகம் முதலிய ஜீவஜெந்துக்க ளெல்லாவற்றிற்

கும், சதா சமயம் பார்த்திருந்து, நீ உதவி செய்து வரவேண்டும். இவ்வுதவி ஒவ்வொரு நாளும் சிறிய விஷயங்களி லேயே ஏற்படவேண்டும்; அதனால் பரோ பகார வழக்கம் ஏற்பட்டு, அபூர்வமாய்ப் பெரிய காரியம் சம்பவிக்கும்பொழுது, நீ அதை விட்டுவிடாது அங்கீகரிக்க வேண்டும். ஏனென்னில் நீ ஈசுவரனோடு ஐக்கியப்பட விரும்புவது, உனது ஸ்வப் பிரயோஜனத்துக்காக இராது, உன்மூல மாய், ஈசுவரானுக்கிரஹ அன்பு, மற்ற உன் உடனொத்த மனிதர்களுக்கும், பெரு கும்படி நீ ஒரு வழியாயேற்படவேண்டும் என்பதற்கே.

< 105 ·

மேன் மார்க்கத்தி லேறிய மனிதன் ஜீவிப்பது தனக்காகவல்ல, பிறருக்காக; அவன் தன்னை மறந்தவனுகி, பிறருக்குக் கைங்கரியம் செய்வதி லேற்படுகிறுன். இவன் ஈசுவரன் கையில் ஒரு லேகனி போலாகிறுன்; அதன் வழியாய் அவரது கருத்துப் பிரவேசித்து, இக்கீழுலகில் வெளியாகின்றது: அக்கருத்து ஒரு லேகனியன்றியில் வெளிப்பட முடியாது. தவிர, அதோடுகூட, தன் ஹிருதயத்தில் நிரம்பி நிற்கும், ஈசுவர வாத்ஸல்யம், உலகெங்கும் பிரவேசித்துப் பிரகாசிக்க அவன் ஒரு ஜீவித அக்கினிஜ்வாலைபோல் இருக்கிறுன்.

பிறருக்கு நீ உதவி செய்ய உனக்கு சக்தியைக் கொடுக்கும் ஞானமும், ஞானத்திற்கு வழிகாட்டும் இச்சையும், இச்சையை உற்சாகப்படுத்தும் அன்பும், இவைகள் தான் உன் லக்ஷணங்கள். ஸத், சித், ஆனந்தம், இம்மூன்றும் ஈசுவரனது மூன்று தோற்றங்கள். அவருடைய நாமாவளிப்பட்டு, அவருக்குத் தொண்டு செய்ய விரும்பும் நீ இத்தோற்றங்களை உலகத்தில் காட்டவேண்டும்.

---

குருபரன் மொழிக்கெதிர் குறித்துநிற் கின்றேன்
தோன்றா விளக்கங் காண்டகு விழிப்பினேன்
உலகச் சமர்க்களத் தூடுபு அன்றேன்
கட்டளை யேற்கக் காத்துநோ றேத்துளேன்;
மன்பதை காப்பன அன்னவன் செய்தவ
நுண்ணிய சைகையு நோக்குகின் றேனால்;
பேரொலி துவன்றிய பாரக மீதலும்
மென்மைசால் ஸ்ரீமுனு முனுப்பு
கன்னர்கேட் கின்றே னென்செவிப் புலனே.

119464